Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.23**

| | | | |
|---|---|---|---|
| Name: | மூர்த்தி | Calling: | தலைமை காவலர் |
| Father's/Husband's Name: | சின்னமூஞ்சி | Religion: | |
| Village: | திருப்பத்தூர் | Age: | 44 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 03.09.2025

(எதிரி ஆஜர் .)

அ.சா.23 முதன்மை விசாரணை

நான் தற்போது வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிப்புரிந்து வருகிறேன். தேதி நினைவில்லை, 2023 ம் வருடம் மூன்றாம் மாதம் ஒரு நாள் காவல் ஆய்வாளர் வளையாம்பட்டு முருகன் கோவில் எதிரே உள்ள சூ கம்பெனி அருகே சைக்கிளில் சென்ற மூன்று பள்ளி மாணவர்கள் மீது வேலூரில் இருந்து திருப்பத்தூர் நோக்கி வந்த கார் மோதி விபத்தான வழக்கில் இறந்துபோன மாணவர்களில் ஒருவரான விஜய் என்பவரின் பிரேதத்தை காவல் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் வாணியம்பாடி அரசு மருத்துவமணைக்கு சடலக்கூறாய்வுக்கு மருத்துவரிடம் ஒப்படைத்து மீண்டும் பிரேத்தை அவர்களின் பெற்றோர் வசம் ஒப்படைத்தேன். அது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் ஆய்வாளர் வேண்டுக்கோளிற்கிணங்க சடலகூறாய்வு வேண்டுகோள் கடித்ததை அரசு மருத்துவமணைக்கு கொண்டு சென்றதை தவிர வேறு ஏதும் தெரியாது என்றால் சரியல்ல, விபத்து ஏற்பட்டது மற்றும் சடலத்தை அடையாளம் காட்டியது நான் தான். நான் சடலத்தை

அடையாளம் காட்டியது அரசு மருத்துவமணையில் தான் என்றால் சரிதான். அதை தவிர வேறு ஏதும் நேரடியாக தெரியுமா என்றால் சடலகூறாய்வு செய்ததை தவிர வேறு ஏதும் தெரியாது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மூர்த்தி

SRIPATHI K
Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.24**

| | | | |
|---|---|---|---|
| Name: | சரவணன் | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's/Husband's Name: | ராசு | Religion: | |
| Village: | மிட்டூர் | Age: | 47 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 03.09.2025

(எதிரி ஆஜர் .)

அ.சா.24 முதன்மை விசாரணை

நான் தற்போது வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில்சிறப்பு உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். 28.02.2023 ம் தேதி கிராமிய காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது அன்றைய காவல் நிலைய குற்ற எண் 83/2023 u/s 279,304(A) என்ற வழக்கில் சூர்யா வயது 12 த/பெ ராஜ், எம்.ஜீ.ஆர்.நகர், வளையாம்பட்டு, என்பவர் வளையாம்பட்டு முருகன் கோவில் எதிரே அரசு நடுநிலைப்பள்ளி அருகே கார் மோதி விபத்தான வழக்கில் இறந்து போன சூர்யா என்பவரின் பிரேதத்தை காவல் துணைகண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்துடன் வாணியம்பாடி அரசு மருத்துவமணைக்கு சடலக்கூறாய்வுக்கு மருத்துவரிடம் ஒப்படைத்து மீண்டும் பிரேத்தை அவர்களின் பெற்றோர் வசம் ஒப்படைத்தேன். அது சம்மந்தமாக காவல் துணைகண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

இவ்வழக்கில் சடலக்கூறாய்விற்கு கடிதம் கொடுத்தது தவிர வேறு ஏதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான், சடலகூறாய்வின் போது அரசு மருத்துவமணையில் தான் இருந்தேன்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சரவணன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.25**

| | | | |
|---|---|---|---|
| Name: | நாகராஜன் | Calling: | காவல் ஆய்வாளர் |
| Father's/Husband's Name: | கலியபெருமாள் | Religion: | |
| Village: | பாகாயம் | Age: | 49 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 03.09.2025

(எதிரி ஆஜர் .)

அ.சா.25 முதன்மை விசாரணை

நான் தற்போது வேலூர் மாவட்டம், பாகாயம் காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். கடந்த 28.02.2023 ம் தேதி, வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய குற்ற எண் 83/2023 சட்டப்பிரிவுகள் 279,304(A) இதச பிரிவுகள் வழக்கு சம்மந்தமாக வாணியம்பாடி உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் அவர்களின் வகைமுறையின் படி இவ்வழக்கில் இறந்து போன இரபீக் வயது 13 த/பெ சாமுவேல் என்பவரின் பிரேத்தை வாணியம்பாடி அரசு மருத்துவமனை சவகிடங்கிடம் வைத்து பெரியோர்கள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சாட்சிகள், சாமுவேல், முசாம்பேல், சனா, மீனாட்சி, முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து சாட்சிகள் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **இரபீக்கின் பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி இரபீக்கின் பிரேத்தை இறப்பின் உண்மை தன்மை அறியும் பொருட்டு கிராமிய காவல் நிலைய காவலர் 435 மனோகரன் என்பவர் மூலம் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்து மருத்துவ பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை உரியவர்களிடம்

ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கும் இவ்வழக்கிற்கும் நேரடியாக எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சியங்கள் எங்களிடம் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல.சாட்சிகளின் வாக்குமூலங்களை காவல் நிலையத்திலே வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல, என் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்

(ஓம்.) நாகராஜன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K